**O.S. No.355/2019**
**DW–1 திரு.முருகானந்தம்**
**Date : 19.03.2025.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : –</u>**

நான் M.A. அரசியல் விஞ்ஞானம் படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்திற்குரிய சங்கதிகளை நான் வழக்கறிஞரிடம் சொல்லி, அவர் தயார் செய்து கொடுத்தார். நான் மேற்படி நிருபண வாக்குமூலத்தை எனக்கு மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் மேற்படி நிருபண வாக்குமூலத்தை நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு, இந்து நாடார் உறவின்முறையின் முன்னாள் தலைவர் க.நடராஜன், உறவின்முறையின் முன்னாள் பொதுச்செயலாளர் தங்கமணி, உறவின்முறையின் முன்னாள் துணைத்தலைவர் ஈஸ்வரன் மற்றும் வழக்கில் கண்டுள்ள இதர பிரதிவாதிகளுக்கும் சேர்த்தும் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் அந்த இதர பிரதிவாதிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் பார்த்தால் சொல்ல முடியும். நான் இதர பிரதிவாதிகளை கலந்து ஆலோசித்து இந்த நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், எனக்கு மட்டும் தான் நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி நிருபண வாக்குமூலத்தை சங்கத்தின் பொதுச்செயலாளர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் பொதுச்செயலாளர் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அது போல் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் பொதுச்செயலாளர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் சங்கத்தில் பொதுச்செயலாளர் கிடையாது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் சங்கத்தில் பொதுச்செயலாளர் என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பிறந்த ஊர் தென்காசி மாவட்டம் பாண்டியாபுரமாகும். நான் அங்கு குடியிருந்து வந்து, 1993 பிப்ரவரி மாதத்தில் நாகமலை புதுக்கோட்டைக்கு வந்தேன். நான் நாகமலை புதுக்கோட்டையில் வாடகைக்கு தான் குடியிருந்து வந்தேன். அதற்கு முன்பு

வாதி சங்கத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ் கடை நடத்தியும் மற்றும் கேபிள் டிவி ஆப்பரேட்டர் வேலையும் நடத்தி வருகிறேன். 1993ம் ஆண்டிற்கு பிறகு 1ம் வாதியின் தகப்பனார் தான் எனக்கு அடைக்கலம் கொடுத்து வாதி சங்கத்தில் உறுப்பினராக சேர்த்துவிட்டார் என்றால் சரிதான். நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு, இந்து நாடார் உறவின்முறை சங்கம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதியின் சங்கமான மதுரை நாகமலை புதுக்கோட்டை இந்து நாடார் உறவின்முறை சங்கம் பதிவு செய்யப்படாத சங்கம் என்றால் அவர் கேட்கிற கேள்வியே தவறு. நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு, இந்து நாடார் உறவின்முறை சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அதற்குரிய ஆடிட்டர் ரிப்போர்ட், வரவு செலவு கணக்கு மற்றும் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக விவரங்களை மாவட்ட பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சங்கத்தை 2004 – 2005 வருடத்திற்கு பிறகு புதுப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆனால் மேற்படி சங்கத்தை புதுப்பித்ததற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 1993ம் வருடத்தில் சங்கம் ஆரம்பித்த போது நாகமலை இந்து நாடார் உறவின்முறை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு, அதன் பின்னர் 1996ம் வருடத்தில் தான் நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு, இந்து நாடார் உறவின்முறை சங்கம் என்று பெயர் மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்திலும் 1996ம் வருடத்தில் தான் நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு, இந்து நாடார் உறவின்முறை சங்கம் என்று மாற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மதுரை நாகமலை புதுகோட்டை இந்து நாடார் உறவின்முறை சங்கம் என்பது வேறு என்றும், நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு, இந்து நாடார் உறவின்முறை சங்கம் என்பது வேறு என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள மேற்படி இரண்டு

சங்கமும் இணைந்தது சம்பந்தமாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதியின் சங்கத்தை சேர்ந்த 10 நபர்கள் சேர்ந்து வா.சா.ஆ.1 ல் கண்ட தாவா வழக்கிடை சொத்தை கிரையம் பெற்றனர் என்றால் சரிதான். அதில் நாகமலை புதுக்கோட்டை கிராமத்திலிருக்கும் நாடார் பொதுவிற்காக வாங்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வாங்கப்பட்ட சொத்துக்கள் பொதுவாக தான் பயன்படுத்தப்பட்டது என்றும், தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி 10 நபர்களில் ஒரு நபர் தான் முத்தையா நாடார் என்றும், அவர் பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரிதான், ஆனால் காப்பாளர் என்ற முறையில் இருந்தது. மேற்படி ஆவணத்தில் கண்ட 10 நபர்கள் யாரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தில் 1998 ம் வருடத்தில் ஆறு கடைகளும், ஒரு மாரியம்மன் கோவிலும் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கடைகளுக்கு முறையாக பிளான் அங்கீகாரம் முத்தையா நாடார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கோவிலுக்கு மதுரை நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறையை சார்ந்தவர்கள் தான் ஆண்டுதோறும் திருவிழா நடத்தியும், 2012 ம் வருடம் கும்பாபிஷேகமும் நடத்தினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆறு கடைகளின் கதவு எண்கள். 6/182, 6/183, 6/184, 6/184-1 ஆகும். எனக்கு தான செட்டில்மென்ட் பற்றி தெரியும். பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தில் ரத்த பந்தம் இல்லாத நபர்கள் தான் எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் ஒரே ஜாதியை சார்ந்த நபர்கள் ரத்த பந்தம் இல்லாத மேற்படி 10 குடும்பத்தில் உள்ள நபர்களின் வாரிசுகள் எழுதியுள்ளார்கள். அதில் மேற்படி பத்து நபர்களில் காளியப்ப நாடார் மகன் V.K.நடராஜன் என்பவர் நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறையின் தலைவர் என்ற முறையிலும், மண்டல நாடார் மருமகன் பெரியகருப்பண் என்பவர் நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறையின் பொருளாளர் என்ற முறையிலும், நாகமலை

புதுக்கோட்டை நாடார் உறவின்முறையின் செயலாளராக இருந்த K.V.M.குருசாமி என்ற ஜெயக்கனி நாடார் இறந்துவிட்ட நிலையில், மேற்படி இருவரும் தான செட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள 10 நபர்களின் வாரிசுதாரர்கள் யாரும் பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தை எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தின் அசல் பத்திரம் என் வசம் இல்லை, ஏனெனில் 2012ம் வருடத்தில் நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறையின் அலுவலகம் உடைக்கப்பட்டு, ஆவணங்கள் 1ம் வாதி வெற்றிவேல் மற்றும் அவரை சார்ந்த நபர்களால் எடுக்கப்பட்டுவிட்டது. அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த புகார் 2013ம் வருடத்தில் CSR No.4001/2013 Mistake of Fact என்று முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தை எழுதிக்கொடுத்த நபர்களுக்கும் மற்றும் தான செட்டில்மென்ட் பத்திரம் பெற்றவர்களுக்கும் அதில் கண்ட சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தில் எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டது என்ற விவரம் எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. மதுரை நாகமலை புதுக்கோட்டை நாடார் உறவின்முறை சங்கத்தில் இந்து நாடார்களும் கிறித்தவ நாடார்களும் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிரையம் வாங்கிய நபர்களில் இந்து நாடார்களும் கிறித்தவ நாடார்களும் உள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள 9வது நபர் கிறித்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பு இந்து நாடார் உறவின்முறை சங்கத்தில் வேறு மதத்தை சார்ந்த நாடார்கள் சமூகத்தை சார்ந்தவர்கள் உறுப்பினராக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் எழுதியது சம்பந்தமாக எங்கள் சங்கத்தில் தீர்மானம்

பிறப்பிக்கப்பட்டதா என்றால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த தீர்மானத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தை வைத்து 2017ம் வருடம் தான் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு பட்டா மாறுதல் தொடர்பாக மனு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, அதற்கு முன்பே கொடுக்கப்பட்டது. அதற்குரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆவணங்கள் அனைத்தும் திருடப்பட்டதால் தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி மனு கொடுக்கப்பட்ட விவரம் தெரிந்து தான் வாதிகள் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் ஆட்சேபனை மனு தாக்கல் செய்த பின்பு தான் 15.10.2019ம் தேதி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் கொடுத்த ஆட்சேபனை மனுவுக்கு விசாரணைக்காக வா.சா.ஆ.4 அறிவிப்பு வாதிகளுக்கு அனுப்பப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த விசாரணை அறிவிப்பில் பட்டா மாறுதல் சம்பந்தமாக பிரதிவாதிகளிடம் கோட்டாட்சியர் அவர்கள் ஆவணங்கள் கேட்ட போது பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரத்தை பிரதிவாதிகள் காண்பித்த போது தான் வாதிகளுக்கே பி.வா.சா.ஆ.4 ஆவணம் எழுதிய விவரம் தெரியவந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் கண்ட சொத்தை எந்தவித பந்தகமும் செய்யாமல் நாகமலை புதுக்கோட்டையில் குடியிருக்கும் அனைத்து நாடார் இன மக்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்த நபர்களில் சண்முகக்கனி, பவுன்ராஜ் ஆகியோர்கள் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி சண்முகக்கனி, பவுன்ராஜ் ஆகியோர்கள் மேற்படி பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பத்திரம் போலியானது என்றும், எனவே வாதிகள் கோரியபடி பரிகாரம் வழங்க வேண்டுமென்று குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. ஆரம்பத்தில் வழக்கில் ஆஜரான

போது எல்லா பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் ஒரு வழக்கறிஞர் ஆஜரானார் என்றால் சரிதான். என்னுடைய நடவடிக்கை சரியில்லை என்பதால் தான் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் உண்மை விவரத்தை வேறு வழக்கறிஞர் மூலம் ஆஜராகி குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சங்கம் நடைமுறையில் இருப்பதற்கு படிவம் –6 மற்றும் படிவம் –7 ஆகியவைகள் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியுள்ளோம், ஆனால் 2013ம் ஆண்டிற்கு பின் பதிவு செய்யப்படவில்லை. 2013ம் ஆண்டிற்கு பிறகு பிரதிவாதிகள் சங்கம் செயல்படவில்லை என்றால் சரியல்ல, செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அவ்வாறு பிரதிவாதிகள் சங்கம் செயல்படுவதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் சங்கம் தற்போது வரை செயல்படவில்லை என்றும், நான் சங்கத்தில் எந்த பொறுப்பிலும் இல்லை என்றும், வேண்டுமென்றே தாவா வழக்கிடை சொத்தை அனுபவிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை நான் தனிப்பட்ட முறையில் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் ஆவணம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. நானோ 1 மற்றும் 2 பிரதிவாதியோ 1ம் பிரதிவாதி சங்கத்தின் உறுப்பினர் என்ற முறையிலோ அல்லது இதர நபர்களோ தாவா பிராது சொத்துக்களில் தங்களுக்கு பாத்தியம் என உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 17.12.1995ல் நாகமலை புதுக்கோட்டை NGO குடியிருப்பிலுள்ள லட்சுமி திருமண மண்டபத்தில் இணைப்பு விழா மற்றும் சிறப்பு பொதுக்குழு நடந்ததாகவும், இரு சங்கமும் 18.12.1995ம் தேதி ஒப்பந்தம் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் நிறைவேற்றப்பட்டது என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 18.12.1995ம் தேதி ஒப்பந்தம் நோட்டரி பப்ளிக் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் குறிப்பிட்டுள்ளது

போல் எந்த இணைப்பு விழாவும் நடக்கவில்லை என்றும், எனவே தான் மேற்படி இணைப்பு விழா சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு 31.10.2019 ம் தேதி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அறிவிப்பு வந்தவுடன் தான் பி.வா.சா.ஆ.4 தான செட்டில்மென்ட் பற்றி தெரியவந்தவுடன் வாதிகள் பிரதிவாதிகள் மீது பி.வா.சா.ஆ.4 ஆவணம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் சரியல்ல. தாவா வழக்கிடை சொத்தை அரசு மேம்பால பணிக்கு கையகப்படுத்த அறிவிக்கை வெளியிட்டது என்றும், அதில் இழப்பீட்டு தொகையை பெற்று, நாங்கள் அனுபவிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தான் இந்த வழக்கை எதிர்கொண்டு வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கிடை சொத்து ஒரு போதும் வாதிகள் தனிப்பட்ட முறையில் சொந்தம் கொண்டாடவில்லை என்றும், நாகமலை புதுக்கோட்டையில் குடியிருக்கும் நாடார் உறவின்முறை நலனுக்காகவே பயன்படுத்தி வருகின்றனர் என்றால் சரியல்ல. வழக்கில் வாதி கோரியுள்ளபடி பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள V.K.நடராஜன், பெரியகருப்பண் காலமானதால் மற்ற நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்து இந்த வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

<u>**மறு விசாரணை –**</u> இல்லை.